MUSTHAFA



# சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை

## மானியக் கோரிக்கை எண் - 15

## சுற்றுச்சூழல்

## அறிவிப்புகள்

## 2016 - 2017

# சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை

மானியக் கோரிக்கை எண்–15

## சுற்றுச்சூழல்

# அறிவிப்புகள்
# 2016–2017

**K.C. கருப்பணன்**
சுற்றுச்சூழல் துறை அமைச்சர்

## சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை
## 2016–2017 ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகள்
## சுற்றுச்சூழல் மற்றும் மாசு கட்டுப்பாடு

**1. தமிழ்நாட்டில் உள்ள 69 கல்வி மாவட்டங்களில் சுற்றுச்சூழல் தகவல் பரப்பு மையம் அமைக்கப்படாத மீதமுள்ள 12 கல்வி மாவட்டங்களில் மையம் ஒன்றுக்கு ரூபாய் இரண்டு இலட்சம் செலவில் சுற்றுச்சூழல் தகவல் பரப்பு மையங்கள் அமைத்தல்.**

பருவ கால மாற்றம் மற்றும் புவி வெப்பமடைதல் ஆகியவை மனித வாழ்க்கையில் ஏற்படுத்தும் தாக்கம் குறித்து பொதுமக்களும் மாணவர்களும் அறிந்துகொள்ள ஏதுவாக தமிழ்நாட்டில் உள்ள 69 கல்வி மாவட்டங்களில், 57 கல்வி மாவட்டங்களில் சுற்றுச்சூழல் தகவல் பரப்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. அம்மையங்களில் சுற்றுச்சூழல் குறித்த புத்தகங்கள் அடங்கிய நூலகம், சுற்றுச்சூழல் குறித்த தகவல்களை விளக்கும் வகையில்

அறிவிப்புப் பலகைகள், அட்டவணை ஆகியவை தமிழிலும் ஆங்கிலத்திலும் இடம் பெற்றுள்ளன. சுற்றுச்சூழல் குறித்த தகவல்களை அறிந்து கொள்ள ஏதுவாக ஒலிபெருக்கி சாதனங்கள், கணினி மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகளும் அமைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 12 கல்வி மாவட்டங்களில் **மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி** நடப்பு நிதியாண்டில் மையம் ஒன்றுக்கு ரூபாய் இரண்டு இலட்சம் வீதம் மொத்தம் ரூ.24.00 இலட்சம் செலவில் சுற்றுச்சூழல் தகவல் பரப்பு மையங்கள் அமைக்கப்படும்.



**2. 32 மாவட்டங்களில் உள்ள தேசிய பசுமைப்படை மன்ற மாணாக்கர்களுக்கு சூழல் போட்டிகள் நடத்தி, அவற்றில் வெற்றி பெறுபவர்களை மாவட்டத்திற்கு ரூபாய் ஒரு இலட்சம் செலவில் சூழல் சுற்றுலா அழைத்துச் செல்லுதல்.**

தற்போது தமிழ்நாட்டில் மாவட்டத்திற்கு 250 பள்ளிகள் வீதம், 8000 தேசிய பசுமைப்படை சூழல் மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு பள்ளியிலும் ஏறத்தாழ 40 முதல் 50 மாணாக்கர்கள் இம்மன்ற உறுப்பினர்களாக சேர்ந்துள்ளனர். இம்மன்ற உறுப்பினர்கள், பேரணிகள், மனிதச் சங்கிலி, கருத்தரங்குகள், கருத்துப்பட்டறைகள், மரம் வளர்த்தல், பள்ளி வளாகத்தினை தூய்மையாக்குதல், மழைநீர் சேகரித்தல், திடக்கழிவு மேலாண்மை போன்ற பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். **மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி** அனைத்து 32 வருவாய் மாவட்டங்களிலும், தேசிய

பசுமைப்படை மன்ற மாணாக்கர்களுக்கு வினாடி வினா, பேச்சுப்போட்டி மற்றும் வரைதல் ஆகிய மூன்று இனங்களில், எட்டாம் வகுப்பிற்கு கீழ் மற்றும் எட்டாம் வகுப்பிற்கு மேல் என இரண்டு பிரிவுகளாக சூழல் போட்டிகள் நடத்தப்படும். ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலும், சூழல் போட்டிகளில் வெற்றி பெற்ற 18 மாணாக்கர்கள், நடப்பு நிதியாண்டில் மாவட்டத்திற்கு ரூபாய் ஒரு இலட்சம் வீதம் 32 மாவட்டங்களில் மொத்தம் ரூ.32.00 இலட்சம் செலவில் அருகில் உள்ள சூழல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கு, சூழல் குறித்த விபரங்களை களத்தில் நேரடியாக மதிப்பீடு செய்ய ஏதுவாக சூழல் சுற்றுலா அழைத்துச் செல்லப்படுவார்கள்.



## 3. இணையவழி கற்றல்–இணையவழி சுற்றுச்சூழல் விழிப்புணர்வு.

பள்ளிகளில் ஏற்கனவே செயல்பட்டு வரும் 57 சுற்றுச்சூழல் தகவல் பரப்பு மையங்கள் **மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி** இணையவழி கற்றல்–இணையவழி சுற்றுச்சூழல் விழிப்புணர்வு என்ற திட்டத்தின் கீழ், நடப்பு நிதியாண்டில் ரூ.14.44 இலட்சம் செலவில் சுற்றுச்சூழல் துறையின் வலைதளத்துடன் இணைக்கப்படும். அனைத்து சுற்றுச்சூழல் தகவல் மையங்களிலும் வலைதள வசதிகள் அமையப் பெற்றுள்ளதால், அம்மையங்கள் சுற்றுச்சூழல் துறை வலைதளம் மூலமாக செயல்பட இயலும். உலகச் சுற்றுச்சூழல் தினம், உலக வன தினம் போன்ற சுற்றுச்சூழல் தொடர்புடைய கொண்டாட்டங்களின் போது, சுற்றுச்சூழல் துறையில் உள்ள வல்லுநர்களோடு

அனைத்து சுற்றுச்சூழல் மையங்களிலிருந்தும் மாணாக்கர்கள் இணையதளம் வழியாக நேரடியாக தொடர்பு கொள்ளும் நேர்காணல் நிகழ்ச்சிகள் நடத்தப்படும். மாணாக்கர்களிடையே சுற்றுச்சூழல் விழிப்புணர்வை மேம்படுத்துவது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.



**4. சிறந்த சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, சுற்றுச்சூழல் தகவல் பரப்பு மையங்களுக்கு சிறு ஒளிபரப்பு உபகரணங்கள் (எல்.சி.டி. புரொஜெக்டர்கள்) வழங்குதல்.**

தமிழ்நாட்டில் தற்போது 57 சுற்றுச்சூழல் தகவல் பரப்பு மையங்கள் இயங்கி வருகின்றன. மேலும் 12 சுற்றுச்சூழல் தகவல் பரப்பு மையங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பருவ கால மாற்றம் மற்றும் புவி வெப்பமடைதல் ஆகியவை மனித வாழ்க்கையில் ஏற்படுத்தும் தாக்கம் குறித்து பொதுமக்களும் மாணவர்களும் அறிந்து கொள்ள ஏதுவாக, இது குறித்த தகவல்கள், இம்மையங்கள் மூலம் அளிக்கப்படுகிறது. இம்மையங்களின் செயல்பாட்டை மேலும் மேன்மையடையச் செய்ய

**மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி** நடப்பு நிதியாண்டில் ஒவ்வொரு மையத்திற்கும் ரூ.40,000 வீதம் 69 மையங்களுக்கு மொத்தம் ரூ.27.60 இலட்சம் செலவில் சிறு ஒளிபரப்பு உபகரணங்கள் (எல்.சி.டி. புரொஜக்டர்கள்) வழங்கப்படும்.



**5. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய தலைமை அலுவலகம் மற்றும் ஐந்து மண்டல அலுவலகங்களுக்கு இடையே காணொலி மூலம் கூட்டம் (Video Conferencing) நடத்தும் வசதி ஏற்படுத்துதல்.**

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மூன்று நிலை அமைப்பாக, சென்னையில் தலைமை அலுவலகத்தையும், சென்னை, வேலூர், கோயம்புத்தூர், திருச்சி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் இணைத் தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் தலைமையில் 5 மண்டல அலுவலகங்களையும் மற்றும் 36 மாவட்ட அலுவலகங்களையும் கொண்டு செயல்பட்டு வருகின்றது. மண்டல அலுவலகங்களில் உள்ள இணைத் தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர்கள் ஆய்வுக் கூட்டங்கள் மற்றும் விவாதங்களில் கலந்து கொள்வதற்காக தலைமை அலுவலகத்திற்கு ஒவ்வொரு முறையும் அழைக்கப்படுகிறார்கள். தலைமை

அலுவலகத்திற்கு அடிக்கடி வருகை தருவதனால் அவர்களது வேலை நேரம் வீணாவதுடன், அவர்களுக்கான போக்குவரத்து செலவு, தங்கும் செலவு மற்றும் கூட்டம் நடத்துவதற்கான செலவும் வாரியத்திற்கு ஏற்படுகின்றது. இதனை கருத்தில் கொண்டு, மண்டல இணைத் தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர்கள் ஆய்வுக் கூட்டங்கள் மற்றும் விவாதங்களில் சிரமமின்றி கலந்து கொள்ளும் வகையில் **மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி** நடப்பு நிதியாண்டில் ரூ.30.00 இலட்சம் செலவில் தலைமை அலுவலகம் மற்றும் ஐந்து மண்டல அலுவலகங்களில் காணொலி மூலம் கூட்டம் **(Video Conferencing)** நடத்தும் வசதி ஏற்படுத்தப்படும்.



## 6. சென்னை மற்றும் பத்து மாவட்ட தலைநகரங்களில் "அம்மா சுற்றுச்சூழல் அரங்கம்" (Amma Eco Pavilion) அமைத்தல்.

சுற்றுச்சூழலை மேம்படுத்துவது தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் கடமைகளில் ஒன்றாகும். இதனை சிறப்பாக செயல்படுத்தும் வண்ணம், சுற்றுச்சூழல் மாசு மற்றும் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வினை கிராம மற்றும் நகர்ப்புற மக்களிடையே ஏற்படுத்தி அவர்களையும் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் பங்குபெறச் செய்வது மிகவும் அவசியம் ஆகும். இதனைக் கருத்தில் கொண்டு **மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி** தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் நடப்பு நிதி ஆண்டில் சென்னை மற்றும் 10 மாவட்ட தலைநகரங்களில் ரூ.5.50 கோடி செலவில் "அம்மா சுற்றுச்சூழல் அரங்கம்" **(Amma Eco Pavilion)** ஏற்படுத்தப்படும்.

இவ்வரங்கத்தில் பொது மக்களுக்கு திடக்கழிவு, மின்னணுக் கழிவு, பிளாஸ்டிக் கழிவு, தொழிற்சாலை கழிவு, மருத்துவக் கழிவு, கட்டுமான மற்றும் இடிமான கழிவு மேலாண்மை குறித்தும் மற்றும் வாகன புகை மாசு, ஒலி மாசு, இயற்கை வளங்கள் பாதுகாப்பு, மழை நீர் சேகரிப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த கருத்துக்களைக் கொண்ட சுவரொட்டிகள், மாதிரி வடிவமைப்புகள், ஒலி, ஒளி காட்சிகள் ஆகியவற்றின் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.



## 7. திருவண்ணாமலை மற்றும் தேனி மாவட்ட அலுவலகங்களுக்கு புதிய அலுவலக கட்டடம் கட்டுதல்.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் 36 மாவட்ட அலுவலகங்கள் மற்றும் 15 மாவட்ட ஆய்வகங்களை கொண்டு செயல்பட்டு வருகின்றது. இவற்றில் 17 மாவட்ட அலுவலகங்கள் மற்றும் 13 மாவட்ட ஆய்வகங்கள் சொந்த கட்டடங்களில் இயங்குகின்றன. மேலும் 6 மாவட்ட அலுவலகங்கள் மற்றும் 1 மாவட்ட ஆய்வகத்திற்கு புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு முடியும் தருவாயில் உள்ளன. **மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி** நடப்பு நிதியாண்டில், திருவண்ணாமலை மற்றும் தேனி ஆகிய இரண்டு மாவட்ட அலுவலகங்களுக்கு புதிய அலுவலகக் கட்டடம் ரூ.4.00 கோடி செலவில் கட்டப்படும்.

## 8. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தில் ஒரு தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் பதவியை ஏற்படுத்துதல்.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் நீர், காற்று மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டங்கள் மற்றும் விதிகளை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இச்சட்டங்கள் மற்றும் விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள வாரியத்தின் பணிகளை திறம்பட செயலாற்றி, சுற்றுச்சூழல் தொழில் நுட்பத்தில் மிகுந்த அனுபவம் கொண்ட நபர் வாரிய தொழில்நுட்ப பிரிவினை வழிநடத்தி செல்வது மிகவும் அவசியமாகின்றது. இதனை கருத்தில் கொண்டு, பிற மாநில மாசு கட்டுப்பாடு வாரியங்களில் உள்ளது போன்றும், தமிழ்நாட்டில் மற்ற அரசு பொறியியல் துறைகளில் உள்ளது போன்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தில் ஒரு தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் பதவி, **மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி** நடப்பு நிதியாண்டில் ரூ.50.00 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்படும்.



## 9. சேலத்தை தலைமையிடமாகக் கொண்டு, இணைத் தலைமை சுற்றுச் சூழல் பொறியாளர் தலைமையில் ஒரு புதிய மண்டல அலுவலகம் ஏற்படுத்துதல்.

தொழிற்சாலைகளை சிறந்த முறையில் கண்காணிப்பதற்கு ஏதுவாகவும், சேலம், நாமக்கல், ஈரோடு மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள சலவை மற்றும் சாயமிடும் தொழிற்சாலைகளுக்காக ஏற்படுத்தப்படவுள்ள பொது கழிவுநீர் சுத்திகரிப்பு அமைப்பு பணிகளை துரிதமாக மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கும் பொருட்டும், **மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி** நடப்பு நிதியாண்டில், ரூ.75.00 இலட்சம் செலவில் சேலத்தை தலைமையிடமாகக் கொண்டு சேலம், நாமக்கல், ஈரோடு மற்றும் கரூர் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கி தமிழ்நாட்டு மாசு கட்டுப்பாடு வாரியத்தில் ஒரு புதிய மண்டல அலுவலகம், இணைத் தலைமை சுற்றுச்சூழல்

பொறியாளர் தலைமையில் ஏற்படுத்தப்படுவதோடு, இவ்வலுவலகத்திற்கு தேவையான இணைத் தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர், சுற்றுச்சூழல் பொறியாளர், உதவி சுற்றுச்சூழல் பொறியாளர், துணை மேலாளர், சுருக்கெழுத்தர், உதவியாளர், தட்டச்சர், அலுவலக உதவியாளர் மற்றும் ஓட்டுநர் ஆகிய 9 பணியிடங்கள் அலுவலகத்திற்கு தேவையான உபகரணங்களுடன் ஏற்படுத்தப்படும்.

**K.C. கருப்பணன்**
**சுற்றுச்சூழல் துறை அமைச்சர்**